பெயார்பஸ்ட் காப்புறுதி லிமிடட்
(நிறுவனம் இலக்கம் : PB5180)
எக்சஸ் டவர் II (14 ஆம் மாடி),
278/4, யூனியன் இடம், கொழும்பு 02, இலங்கை
தொடர்பு இலக்கம் :+94 11 2428428 |
தொலைநகல் :+94 11 2438438
மின்னஞ்சல் : info@fairfirst.lk |
இணையதளம் : www.fairfirst.lk

**காப்புறுதி பத்திர தகவல் ஆவணம் (IPID)**

**இலத்திரனியல் உபகரண காப்புறுதிப் பத்திரம்**

1. **காப்பீட்டு விடயதானம்**
   இக்காப்புறுதிப் பத்திரமானது, எதிர்பாரா மற்றும் திடீர் பௌதீக இழப்பு, சேதங்களில் இருந்தும் கணணிகள், சேவையகம், தொலைத்தொடர்பு உபகரணங்கள் மற்றும் குறித்துரைக்கப்பட்ட கருவிகள் போன்ற இலத்திரனியல் உபகரணங்களை காப்பீடு செய்கின்றது. உபகரணங்கள் செயற்படும் போதும், ஓய்விலிருக்கும் போதும், துப்புரவு செய்யப்படுவதற்கும் முற்றான திருத்தப்படும் போதும், வளாகத்தினுள் இடம் மாற்றப்படும் போதும் காப்பீடு விஸ்தரிக்கப்படுகின்றது.

2. **காப்பீடு செய்யப்பட்டவை யாவை?**

   காப்புறுதி செய்யப்பட்ட இலத்திரனியல் உபகரணங்களுக்கு அவை செயற்படும் போதும், ஓய்விலிருக்கும் போதும், துப்புரவு செய்யப்படும் போதும், முற்றாக திருத்தப்படும் போதும், காப்புறுதி செய்யப்பட்ட வளாகத்தினுள் இடம் மாற்றப்படும் போதும், கொண்டு செல்லும் போதும் ஏற்படும் இழப்பு, சேதம் உட்பட எதிர்பாரா மற்றும் திடீர் பௌதீக இழப்பு, சேதம் காப்பீடு செய்யப்படுகின்றது.

   காப்புறுதி செய்யப்பட்ட பௌதீக சேதத்தினால் பாதிக்கப்பட்ட சேமிக்கப்பட்ட தரவுகள் உட்பட புற தரவு மீடியாவுக்கும், அத்துடன் செயற்படுவதில் ஏற்படும் அதிகரித்த செலவினங்களுக்கும் இக்காப்பீடு விஸ்தரிக்கப்படலாம்.

3. **காப்பீடு செய்யப்படாதன யாவை? (ஒரே பார்வையில்)**
   - காப்புறுதி பெறுனர் அல்லது அவர்களுடைய பிரதிநிதிகளின் வன்முறை செயற்பாடுகள் அல்லது முற்றான புறக்கணிப்பு.
   - காப்புறுதிப் பத்திர தொடக்கத்தின் போது காப்புறுதி பெறுனர் அறிந்திருந்த பிழைகள் அல்லது குறைபாடுகள்.
   - கிரமமான சிதைவு, தேய்மானம், அரிப்பு அல்லது வளிமண்டல நிலைமைகள்.
   - விளைவாந்தன்மையான இழப்புகள், தண்டங்கள் அல்லது எவ்வகையானதுமான பொறுப்புக்கள்.

- (குறிப்பாக உடன்படா விடில்) களவு.
- வெளிச் சேதம் ஏற்படாவிடத்து, மின்சார, தொழில் நுட்ப செயலிழப்பினால் ஏற்படும் சேதம்.
- காப்புறுதி செய்யப்பட்ட சேதத்தினால் பாதிக்கப்படா விடின், மின் குமிழ்கள், வால்வுகள், உருக்கிகள், சில்லுகள், கருவிகள், கண்ணாடி, பீங்கான் மற்றும் செயலி மீடியா என்பனவற்றின் சேதம்.

**4. காப்புறுதிக் கட்டணம் செலுத்துகை**

பொதுவாக ஒரு வருட காலமாகிய காப்புறுதிக் காலத்துக்கு ஒரே செலுத்துகையில் செலுத்தப்பட வேண்டும்.

**5. காப்புறுதி பெறுனரின் கடப்பாடுகள்**

காப்புறுதி செய்யப்பட்ட உபகரணங்கள் சகல நியதிச் சட்ட தேவைப்பாடுகளையும், உற்பத்தியாளரின் பரிந்துரைகளுக்கும் அமைவாக பேணப்படுவதுடன் இயக்கபடவும் வேண்டும். காப்புறுதி செய்யப்பட்ட ஆபத்தை பாதிக்கத்தக்க ஏதும் முக்கிய மாற்றம் பற்றி காப்புறுதி வழங்குனர் அறிவிக்கப்பட வேண்டும்

கோரத்தக்க சம்பவமொன்றின் போது, காப்புறுதி செய்யப்பட்ட சொத்துக்கு மேலும் இழப்பு அல்லது சேதம் ஏற்படுவதை தவிர்ப்பதற்கான நியாயாமான சகல முன்னெச்சரிக்க நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும், கோரிக்கையை மதிப்பீடு செய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள யாரும் மதிப்பீட்டாளர்கள், இழப்பு இயைபாக்குனர்கள் அல்லது விசாரணையாளர்களுடன் முழுமையான ஒத்துழைப்பும் எதிர்பார்க்கப்படுகின்றது.

ஏதும் இழப்பு அல்லது சேதம் பற்றி உடனடியாக பயார்பஸ்ட்டுக்கு அறிவிப்பதுடன், சம்பவத்தின் 14 நாட்களுக்குள் பூரணப்படுத்தப்பட்ட கோரிக்கை படிவமொன்றும் சமா்ப்பிக்கப்பட வேண்டும். சேதத்தின் புகைப்படங்கள் உட்பட சம்பந்தப்பட்ட சகல ஆதார ஆவணங்களும், திருத்த வேலை மதிப்பீடுகளும் மற்றும் பாதிப்புக்குள்ளான அம்சங்களின் உரித்துரிமை சான்றுகளும் சமா்ப்பிக்கப்பட வேண்டும்.

**6. முறைப்பாடுகளையும் இன்னல்களையும் கையாள்தல்**

**படிமுறை 1 – பெயார்பஸ்ட் இன்சூரன்ஸோடு தொடர்பு கொள்ளவும் –**

☎ +94 11 2428282 (மு.ப. 8.30 தொடக்கம் பி.ப. 5.00 வரை) | ✉ – info@fairfirst.lk

உங்கள் விடயங்களை பெயாபஸ்ட்டின் பொறுப்பு & இணக்க குழுவுக்கு கொண்டு செல்லலாம்.

**படிமுறை 2 – (தீர்க்கப்படா விடின்) புறக் கொண்டு செல்லல் –**

- இலங்கை காப்புறுதி சீர்படுத்தல் ஆணையம் (IRCSL)

☎ +94 11 2335167 | ✉ info@ircsl.gov.lk | 🌐 www.ircsl.gov.lk

- காப்புறுதி குறைகேள் அதிகாரி

☎ +94 11 2505542 / +94 11 2505041 | ✉ info@insuranceombudsman.lk |

🌐 www.insuranceombudsman.lk

7. **மேலும் தகவலுக்கு எம்மை தொடர்பு கொள்ளவும் –**

**பெயார்பஸ்ட் இன்சூரன்ஸ் லிமிடட்**

எக்சஸ் டவர் II (14 ஆம் மாடி), இல.278/4, யூனியன் இடம், கொழும்பு 02, இலங்கை

☎ +94 11 2428428 | ✉ info@fairfirst.lk | 🌐 www.fairfirst.lk

**முக்கிய குறிப்பு** – பிரதான காப்பீடு மற்றும் அவசியமாயின், மேலதிக காப்பீடுகளினதும் சாராம்சம் ஒன்றை வழங்குவதே இந்த **IPID** இன் குறிக்கோளாகும். இது உங்களது குறிப்பான தனிநபர் பிரத்தியேக தேவைகளுக்கானதல்ல. முழுமையானதும் பிரத்தியேகமானதுமான தகவல்களை, ஒப்பந்தத்துக்கு முந்திய மற்றும் ஒப்பந்த நியதிகளில் பூரணப்படுத்தவும். உற்பத்தியின் விடுகைகள், உங்களது காப்புறுதி பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. **IPID** யானது, காப்புறுதியின் / ஒப்பந்தத்தின் அங்கமாகாது. எனவே, ஏதும் சச்சரவின் போது, காப்புறுதி பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நியதிகளும் நிபந்தனைகளுமே மேலோங்கியிருக்கும்.